DEPOSITIONS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, NO.II BHAVANI
CASE NO.C.C.No.99/2024
PW -1

| | | |
|---|---|---|
| Name | : | **சக்திவேல்** (LW -1 ) |
| Father's Name/Husband's Name | : | கண்ணுப்பையன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with th Provisions of th Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the date 01.04.2025 (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் PM ).

| |
|---|
| எதிரிகள் ஆஜர். |

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளின் பெயர் தெரியாது. அவர்கள் என்னுடன் வேலை செய்தவர்கள் அதனால் தெரியும்.

சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மாலை 04.00 மணிக்கு நான் அந்தியூரில் உள்ள பெட்ரோல் பங்கிற்கு பின்புறம் வேலையை முடித்து விட்டு என் வீட்டிற்கு சென்றேன். நான் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் மூவரும் அங்கு வந்தார்கள். இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியுள்ள எதிரிகளில் நடுவில் நின்றிருக்கும் சிவப்பு நிற சட்டை அணிந்திருக்கும் நபர் ( நீதிமன்றத்தில் பெயர் கேட்டபோது எதிரி சசிக்குமார் என தெரியவந்தது) குடித்து விட்டு வாயில் கஞ்சாவை போட்டுக்கொண்டு வந்து கம்பியால் எனது முன் தலையில் அடித்தார். அவர் அடித்த கம்பியை தற்போது பார்த்தால் அடையாளம் தெரியாது. அங்கு சிவப்பு நிற சட்டை அணிந்ததிருக்கும் எதிரியின் தம்பிக்கும் எனக்கும் மண் வெட்டி வேலை செய்தது சம்மந்தமாக சண்டை வந்தது. அவர் அடித்ததில் எனக்கு முன் தலையில் காயம் ஆனது. பின்னர் நான் இருசக்கர வாகனத்தில் அந்தியூர் அரசு மருத்துவமைனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்தேன். நான் அந்தியூர் அரசு

மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை வந்து விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்க நான் நடந்த விபரங்களை சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகார் வாக்கு மூலத்தில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை மட்டும் தான் போலிசாரிடம் தெரிவித்தேன் என்றால் சரிதான். சம்பவ தினத்திற்கு முன்பே எனக்கும் ஆஜர் எதிரிகளில் உள்ள சிவப்பு நிற சட்டை அணிந்தவரின் தம்பிக்கும் கட்டிட வேலையில் சம்பள கொடுக்கல் வாங்களில் தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி தகராறு சம்மந்தமாக ஆஜர் எதிரிகளில் உள்ள சிவப்பு நிற சட்டை அணிந்தவரின் தம்பி என்மீது புகார் அளித்து விடுவார் என்ற காரணத்தில் நான் ஆஜர் எதிரிகள் என்னை தாக்கியதாக அவர்கள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கும்போது ஆஜர் எதிரிகளின் பெயர்களை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் சிவப்பு நிற சட்டை அணிந்திருக்கும் எதிரியின் பெயர் சசிக்குமார் என்றும் அவர் எந்த விதமான குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

DEPOSITIONS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, NO.II BHAVANI
CASE NO.CC.No.99/2024
PW -2

| | | |
|---|---|---|
| Name | : | **சதீஷ்** (LW - 2) |
| Father's Name/Husband's Name | : | செல்வராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with th Provisions of th Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the date 01.04.2025 (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் PM ).

| |
|---|
| எதிரிகள் ஆஜர். |

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து கொண்டு கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சி சக்திவேல் எனது சித்தப்பா. ஆஜர் எதிரிகள் யுவராஜ் , சசி , தேவராஜ் ஆகியோர்கள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள் அதனால் எனக்கு தெரியும்.

சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மாலை 04.30 to 05.00 மணிக்கு வெள்ளைபிள்ளையார் கோவிலில் உள்ள பெட்ரோல் பங்கிற்கு பின்புறம் உள்ள ALMP திருமணமண்டபத்தில் நான் யுவராஜ் , சின்னதுரை ஆகியோர் வேலை செய்து கொண்டு இருந்தோம் அப்போது சின்னதுரை என்பவருக்கு சக்திவேலுக்கும் வாய் தகராறு நடந்தது. சின்னதுரை சக்திவேலை வாடா தாயோழி அங்க பிரச்சனை செய்தயில்ல கண்டாரோலி பையனே என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். நான் சண்டையை தடுத்து சக்திவேலை அவருடைய வீட்டிற்கு கூட்டி சென்று சக்திவேலின் வீட்டிற்கு முன்புறம் உள்ள காரையில் இருசக்கர வாகனத்தில் இருந்து இறக்கி விடும்போது ஆஜர் எதிரிகள் யுவராஜ் சசி, தேவராஜ் மற்றும் சின்னதுரை ஆகியோர்கள் அங்கு வந்து கம்பியால் சக்திவேலை சசி நெற்றியில் அடித்தார். பின்னர் தேவராஜ் , யுவராஜ் ஆகியோர்கள் சக்திவேலை கீழே தள்ளிவிட்டு சக்திவேலின் கை, பின்முதுகு

ஆகிய இடங்களில் அடித்தார்கள். என்னிடம் காட்டப்படும் கம்பிதான் சசி , சக்திவேலின் நெற்றியில் அடித்த கம்பியாகும். **அந்த கம்பி அ.த.சா.பொ 1 ஆக குறியீடு செயய்யப்படுகிறது**. எதிரிகள் சக்திவேலை அடித்ததில் நெற்றி, முதுகு ஆகிய இடங்களில் காயம் ஆனது. பின்னர் நான் எனது இருசக்கர வாகனத்தில் சக்திவேலை அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்க நடந்த விபரங்களை சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவத்திற்கு பின்னிட்டு எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவதினத்தன்று இரவே என்னை விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு போலிசார்கள் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1–ஐ காவல் நிலையத்தில் யார் ஒப்படைத்தார்கள் என்றால் சக்திவேல் தான் ஒப்படைத்தார். நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 20 நபர்கள் இருந்தார்கள். அவர்களை போலிசார் விசாரரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள் . சக்திவேல் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு துாரம் என்றால் எனது வீட்டிற்கு ஒட்டிய வீடாகும். சக்திவேலின் வீட்டிற்கு ஒட்டினார் போல் எனது வீடு இல்லை என்றாலும் வழக்கு சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சக்திவேல் எனது சித்தப்பா என்பதால் அவருக்கு ஆதராவாக நான் பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITIONS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, NO.II BHAVANI
CASE NO.C.C.No.99/2024
PW -3

| | | |
|---|---|---|
| Name | : | தினேஷ் (LW -3 ) |
| Father's Name/Husband's Name | : | இளங்கோவன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with th Provisions of th Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the date 01.04.2025 (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் PM ).

| |
|---|
| எதிரிகள் ஆஜர். |

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து கொண்டு காரைவேலை செய்து வருகிறேன். சாட்சி சக்திவேல் எனக்கு அண்ணன் உறவுமுறை. ஆஜர் எதிரிகள் யுவராஜ், சசி, தேவராஜ் ஆகியோர்கள் எனது ஊரைச்சார்ந்தவர்கள் அதனால் தெரியும்.

2021 ம் வருடம் மாலை நேரத்தில் நான் வீட்டில் இருந்தேன். அருகில் பேசிக்கொண்டிருந்தவர்கள் சண்டை நடந்தாக என்னிடம் சொன்னார்கள். பின்னர் சக்திவேலை அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டிசென்றதாக அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள். பின்னர் நான் அந்தியூர் அரசு மருத்துவமனை சென்று சக்திவேலை பார்த்தபோது அவருக்கு நெற்றியில் கட்டு போட்டு இருந்ததை பார்த்தேன். நான் எப்படி சண்டை நடந்தது என்று விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியானவர் ஏற்கனவே போலிசாரிடம் கொடுத்த கு.வி.மு.சா. பிரிவு 161(3) வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, நீதிமன்றம் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்தது)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 24.01.2021 ம் தேதி ALMP கல்யாண மண்டபமத்தில் நானும் சக்திவேலும் எங்கள் ஊரை சார்ந்த சின்னதுரை மற்றும் சிலரும் கட்டிட வேலை செய்து கொண்டு இருந்தோம் என்றும் அப்போது சின்னதுரை என்பவர் சக்திவேலை தகாத வார்த்தையால் பேசி இருவருக்கும் தள்ளுமுள்ளு ஆகிவிட்டது என்றும் பின்னர் சுமார் மாலை 06.30 மணிக்கு எதிரிகள் யுவராஜ், சசி, தேவராஜ், சின்னதுரை ஆகிய நான்கு பேரும் சக்திவேலின் வீட்டின் முன்பு வந்து யுவராஜ் சக்திவேலின் கன்னத்தில் ஓங்கி அடித்தும் தேவராஜ் சசி இருவரும் சக்திவேலை கீழே தள்ளி கையால் நெஞ்சில் ஓங்கி குத்தியும், காலால் எட்டி உதைத்தார் என்றும் சின்னதுரை கீழே கிடந்த இரும்பு கம்பியை எடுத்து சக்திவேலின் இடது வலது பக்க தலையில் அடித்ததில் அவருக்கு இரத்த காயம் ஏற்பட்டது என்றும் யுவராஜ் கீழே கிடந்த ஒரு கருங்கல்லை எடுத்து சக்திவேலின் இடது பக்க தலையில் ஓங்கி அடித்தார் என்றும் இதை பார்த்த நானும் சதீஷ் என்பவரும் சத்தம் போட்டோம் என்றும், நாங்கள் சத்தம் போட்டதை பார்த்து சின்னதுரை இரும்பு கம்பியை கீழே போட்டு விட்டு எதிரிகள் நான்கு பேரும் ஓடிவிட்டார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

DEPOSITIONS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, NO.II BHAVANI
CASE NO.C.C.No.99/2024
PW -4

| | | |
|---|---|---|
| Name | : | சின்னதுரை(LW -4 ) |
| Father's Name/Husband's Name | : | குருசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with th Provisions of th Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the date 01.04.2025 (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் PM ).

| |
|---|
| எதிரிகள் ஆஜர். |

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து கொண்டு வழக்கு சம்பவம் நடைபெறும் போது காரை வேலை செய்து வந்தேன். தற்போது தொழில் செய்து வருகிறேன்.

கடந்த 2021 ம் வருடம் மாலை 04.30 மணிக்கு வெள்ளைபிள்ளையார் கோவிலில் நான் வேலை செய்து கொண்டு இருந்தேன். அப்போது சண்டை நடந்த இடமான கிருஷ்ணாபுரத்திற்கு சதீஷ் என்பவர் முதலில் சென்றார். யார் யாருக்கு சண்டை நடந்தது என்று எனக்கு முதலில் தெரியாது. பின்னர் சக்திவேலின் மண்டை உடைந்து விட்டதாக சதீஷ் என்பவர் என்னிடம் சொன்னார். நான் எப்படி என்று விசாரித்த போது யாரோ அடித்து விட்டதாக சொன்னார். பின்னர் நானும் சதீஷ் என்பவரும் அந்தியூர் அரசு மருத்துவமனை சென்று சக்திவேலை பார்த்தபோது அவருக்கு மண்டையில் தையல் போட்டுக்கொண்டு இருந்தார்கள். பின்னர் அவரிடம் நான் எப்படி சண்டை நடந்தது என்று விசாரிக்கவில்லை. இந்த வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியானவர் ஏற்கனவே போலிசாரிடம் கொடுத்த கு.வி.மு.சா. பிரிவு 161(3) வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, நீதிமன்றம் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்தது)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 24.01.2021 ம் தேதி ALMP கல்யாண மண்டபமத்தில் நானும் தினேஷ் சக்திவேல் மற்றும் எங்கள் ஊரை சார்ந்த சின்னதுரை மற்றும் சிலரும் கட்டிட வேலை செய்து கொண்டு இருந்தோம் என்றும் அப்போது சின்னதுரை என்பவர் சக்திவேலை தகாத வார்த்தையால் பேசி இருவருக்கும் தள்ளுமுள்ளு ஆகிவிட்டது என்றும் பின்னர் சுமார் மாலை 06.30 மணிக்கு எதிரிகள் யுவராஜ், சசி, தேவராஜ், சின்னதுரை ஆகிய நான்கு பேரும் சக்திவேலின் வீட்டின் முன்பு வந்து யுவராஜ், சக்திவேலின் கன்னத்தில் ஓங்கி அடித்தும் தேவராஜ் சசி இருவரும் சக்திவேலை கீழே தள்ளி கையால் நெஞ்சில் ஓங்கிகுத்தியும், காலால் எட்டி உதைத்தார் என்றும் சின்னதுரை கீழே கிடந்த இரும்பு கம்பியை எடுத்து சக்திவேலின் இடது வலது பக்க தலையில் அடித்ததில் அவருக்கு இரத்த காயம் ஏற்பட்டது என்றும் யுவராஜ் கீழே கிடந்த ஒரு கருங்கல்லை எடுத்து சக்திவேலின் இடது பக்க தலையில் ஓங்கி அடித்தார் என்றும் இதை பார்த்த நானும் சதீஷ் என்பவரும் சத்தம் போட்டோம் என்றும், நாங்கள் சத்தம் போட்டதை பார்த்து சின்னதுரை இரும்பு கம்பியை கீழே போட்டு விட்டு எதிரிகள் நான்கு பேரும் ஓடிவிட்டார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.